தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1977 ஆகஸ்ட் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்,

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, சனிக்கிழமை அன்று நான்கு கேள்விகள், திங்கட்கிழமை எடுத்துக் கொள்வதாக ஒத்திவைக்கப் பெற்றன. நேற்று அவற்றில் இரண்டு கேள்விகள் தான் எடுத்துக்கொள்ளப்பெற்றன. வினாக்கள் எண் 29-ம், 30-ம் எடுத்துக்கொள்ளப்பெறவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த இரண்டு கேள்விகளும் கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டியவை. அவர் மகாநாட்டிற்குச் சென்றிருப்பதால் ஊரில் இல்லை. வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்பெறும்.

இன்றைய வினாப் பட்டியலில் உள்ள வினா எண் 36, முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க, நாளைக்கு ஒத்தி வைக்கப்பெறுகிறது.

இறைவைப் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு

*37 வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் இறைவைப் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க தடை விதிக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

கடன்களைத் திரும்ப வசூலித்தல்.

*38 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு - கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —?

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கடன்களை திருப்பி வசூலிப்பதில் விவசாயிகளிடம் அதிகாரிகளின் கெடுபிடிகள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளனவா ?